# நற்றிணையில் தோழி கூற்றும்- ஆற்றுப்படுத்தலும்

முனைவர் ச.பிரபாகரன்,
உதவிப்பேராசிரியர் இளநிலைத் தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி
DOI 10.5281/zenodo.12736657.

**Abstract :**

Sangam Tamil literature is very ancient. Tamilkudi is characterized as "Kaldonri Mandonarak Kalathe Valodu, Mundonriya Vishanakudi". Sangam literature, which has expressed the normal human life in two principles, inner and outer, introduces life with the aim of living like this. In Sangam literature, the role of friend is given priority just as leader and leader get priority. A friend is someone who can talk to everyone without fear. She not only advises but also scolds at some places. You can see the news of Dozhi Koottru padalgal found in the news through this article.

Key Words : Sangam Literature - Thozhi - Virtue and morality

## முன்னுரை

சங்கத் தமிழ் இலக்கியங்கள் மிகப்பழமையானவை . “கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு , முன்தோன்றிய மூத்தகுடி ” எனச் சிறப்பிக்கப்படுகிறது தமிழ்க்குடி . இயல்பான மக்கள் வாழ்வியலை அகம் -புறம் எனும் இரு கோட்பாடுகளில் வெளிப்படுத்திய சங்க இலக்கியங்கள், இப்படித்தான் வாழவேண்டும் என்னும் நோக்கில் வாழ்வியலை அறிமுகம் செய்கின்றன. சங்க இலக்கியத்தில் தலைவன் , தலைவி எவ்வாறு முதன்மை பெறுகின்றார்களோ அதைப்போலவே தோழி என்னும் பாத்திரமும் முதன்மை பெறுகின்றது . தோழி என்பவள் எல்லோரிடமும் அஞ்சாமல் பேசக்கூடியவள் . அறிவுரை மட்டும் கூறாமல் சில இடங்களில் இடித்துரைக்கவும் செய்கின்றாள் . நற்றிணையில் காணலாகும் தோழி கூற்றுப்பாடல் செய்திகளை இக்கட்டுரை வழியாகக் காணலாம்.

## தோழி

தலைவனும் தலைவியும் ஒருவருக்கொருவர் பேச முடியாமல் தவிக்கும் நேரங்களில் தோழி என்ற மூன்றாம் நபரை நாடும் நிலை ஏற்படும் . அப்பொழுது தோழி தனது


http://Creativecommons.org//license/by/4.0/.

புத்திக்கூர்மையால் இருவருக்கும் நல்ல வழிகாட்டியாகச் செயல்படுகிறாள் . நட்பு என்பதற்குத் தொடர்போ, பழக்கமோ வேண்டியதில்லை, ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும். இதனை,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்" (குறள்.785)

என்ற குறள் வழியாகத் தோழியும் , தலைவியும் ஈருயிர் ஓர் உடல் போல வாழ்பவர்கள் எனச் சங்கஇலக்கியங்கள் கருதுகின்றன.

### கார்காலம் ஆரம்பம்

தலைவன் தலைவியை மணந்து கொள்வதாகக் கூறிப் பொருளீட்ட நெடுந்தொலைவுக்குச் சென்றுவிட்டான் அதனை எண்ணித் தலைவி வருத்தப்பட்டுக்கொண்டு இருக்கின்றாள். இதனை,

"சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்கப்
பெருவரை அடுக்கத் தருவி ஆர்ப்பக்
…………………………………..
தழங்குகுரல் ஏறொடு முழங்கி, வானம்
இன்னே பெய்ய மின்னுமால் – தோழி" (நற்.பா.7)

என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன . இவ்வாறு தோழி , கார்காலம் தொடங்கிவிட்டது தலைவன் விரைவாக வந்து உன்னை மணந்து கொள்வான் என்று தலைவியைத் தேற்றுகின்றாள்.

### தோழி தலைவனிடம் இகழ்ந்து கூறுதல்

தலைவனோ தலைவியோ தங்களது வாக்கினை மீறும் பொழுது தோழி நக்கீரர் போல் தட்டிக் கேட்கும் உரிமையைப் பெற்றிருந்தாள் . உரிமையோடு இகழ்ந்து பேசித் தலைவனை ஊக்கப்படுத்தி, தலைவியை மணந்து கொள்ளச் செய்ய முனைந்தாள். இதனை,

"சுடர்த்தொடிக் கோமகள் சினந்தென அதனெதிர்
மடத்தகை ஆயம் கைதொழு தாஅங்


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

..........................................

பிச்சைசூழ் பெருங்களிறு போலஎம்

அட்டில் ஓலை தொட்டனை நின்மே!" (நற். பா.300)

என்ற பாடல் அடிகள் தலைவியை மணம் முடிக்க வேறொருவன் வந்து பரிசில்களுடன் நிற்க , நீ இன்னும் எங்கள் வீட்டுச் சமையல் அறையில் பனையோலையால் வேயப்பட்ட கூரையின் ஓலையைத் தொட்டுக் கொண்டு ஒதுங்கி நிற்கிறாய் . நீ அப்படியே நிற்பாயாக வேறு என்ன செய்யப் போகிறாய்? என்று தோழி பிறர் வரைவின் மேலிட்டு வந்ததைத் தலைவனிடம் கூறி , அவனது இயலாமையை இகழ்ந்து, விரைவில் மணம் முடிக்க வருமாறு அழைக்கின்றாள்.

## தலைவியை ஆற்றுப்படுத்துதல்

கார்காலம் வந்ததும் நான் வந்துவிடுவேன் என்று கூறிச் சென்ற தலைவன் , முன்பனிப் பருவம் வந்தும் இன்னும் வரவில்லையே என்று வாடிக்கொண்டிருந்தாள் தலைவி . அவ்வேளையிலே அவனும் வந்துவிட்டான் . அப்போது தோழி தலைவியிடம் சென்று , இனி உன் துயரமெல்லாம் நீங்கிவிடும் தலைவன் வந்துவிடுவான் என்று மகிழ்வுடன் தலைவியிடம் கூறுகின்றாள். இதனை,

"கொண்டல் ஆற்றின் விண்டலைச் செறீஇயர்

..................................................

பருமயானை அயாவுயிர்த் தாஅங்கு

இன்னும் வருமே தோழி! என்னே

வன்க ணாளரோ டியைந்த

புன்கண் மாலையும் புலம்புமுந் துறுத்தே" (நற்.பா.89)

என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன.

## தலைவனுக்கு அறிவுரை கூறுதல்

தலைமக்கள் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின் , முதல்நாள் கண்ட ஆவலினால் மறுநாளும் சந்திக்க வேண்டும் என்று விரும்புவர். இதனை அறிந்த தோழி, அவர்கள் இருவரும் புணரக் குறியிடம் ஒன்றைச் சுட்டுவாள் . இக்குறியானது இரவுக்குறி , பகற்குறி என


http://Creativecommons.org//license/by/4.0/.

இருவகைப்படும். இரவுக்குறியானது இல்லத்தின் ஒருபுறத்தே , யாரும் அறியாது வீட்டில் உள்ளோர் பேசுவது கேட்கும் தூரத்தில் இருக்கும் . இந்த இரவுக் குறியிடத்திற்குத் தலைவனை வா என அழைக்கும் உரிமையைத் தோழி பெற்றிருந்தாள் என்பதை,

“சிறுகண் யானைப் பெருங்கை ஈரினம்
குளவித் தண்கயங் குழையத் தீண்டிச்
சோலை வாழை முணைஇ அயலது
வேரல் வேலிச் சிறுகுடி அலரச்
……………………………
……………………………
கல்கெழு பாக்கத் தல்கினை செலினே” (நற்.பா.232)

என்ற பாடல் வழியாக உணரலாம் . பகற்குறி வந்தால் தலைவன் யாரிடமாவது மாட்டிக் கொள்வான் என்பதை உணர்ந்து , பகற்குறி வராமல் இரவுக்குறியிலே வா என்று தோழி தலைவனிடம் கூறுகின்றாள்.

## அறத்தோடு நிற்றலில் தோழி உரைப்பவை

தலைவன் வரைவை நீடிக்கும் போது தலைவி துயரடைகின்றாள் . இந்நிலையில் தோழி, பெற்றோர்களுக்குத் தலைவன் தலைவி களவொழுக்கத்தினை வெளிப்படுத்துகிறாள் . இதுவே, “அறத்தோடு நிற்றல்” எனப்படும். தலைவியின் உடல்மெலிவிற்குக் காரணம் யாதோ ? என்று நினைத்துத் தாய் வெறியாடல் நிகழ்த்துகிறாள். முருகனால் வந்த நோய் என்று கூறவே சடங்கு முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்கிறாள் . அந்நிலையில் தோழி அங்கு சென்று உண்மையான காரணம் இன்னது என அறிவிக்க முயல்கிறாள் . முருகனையே முன்னிலைப்படுத்திக் களவை வெளிப்படுத்துகிறாள். முருகே.. மலை நாடனது மார்புதர வந்தநோய் நின்னால் வந்ததன்று என்பதை நீ அறிந்து வைத்தும் , வேலன் வெறியாட்டத்திற்குப் பலிபெறுவதற்காக வந்த நீ மடவையாவாய் என்று கூறுகிறாள். இதனை,

“கடவுட் கற்சுனை அடைவிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

..............................................

..............................................

கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்!
கடவு ளாயினும் ஆக;
மடவை மன்ற வாழிய முருகே! (நற்.34)

என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன . இவ்வாறு முருகனைச் சாடி , அறத்தொடு நின்று தலைவியின் காதலைத் தன்னுடைய சொல்வன்மையால் புலப்படுத்துகிறாள்.

## முடிவுரை

துணிச்சல் மிகுந்த சங்கப் பெண்ணாக வலம் வருகின்ற தோழி , மனநிலைகளை ஆராய்ந்து பார்த்து தீர்ப்புச் சொல்கிறாள் . ஆற்றாமை புலம்பலுக்கு ஆறுதல் மொழிகின்றாள் . அறத்தொடு நின்று திறத்தோடு பேசுகின்றாள் . மனம், மொழி, மெய் ஆகியவற்றை அறிந்து கொண்டு தலைவனை இடித்துரைத்துத் தலைவியின் பாங்கினை அவனுக்குப் புரிய வைக்கின்றாள். கார்காலத்தின் தொடக்கத்தில் பிரிவால் வாடும் மனத்துயரை நீக்கப் பேசுகின்றாள். இவ்வாறு நற்றிணையில் தன்னால் இயன்றளவில் தலைவியைத் தேற்றுகின்ற பெண்ணாக இருக்கின்றாள் . களவு வாழ்வின் முடிவும் கற்பு வாழ்வின் தொடக்கமுமாக இருக்கும் நற்றிணைத் தோழியின் கூற்றுகள் தலைவன் தலைவியர் மாண்பினை , அக்காலச் சமுதாய வாழ்வியலை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன.

## துணைநின்ற நூல்கள்

1. நீதிநூற்களஞ்சியம், பத்மதேவன், கொற்றவை பதிப்பகம், சென்னை, 1983.
2. சங்க இலக்கியம் , நற்றிணை, புலியூர் கேசிகன் (உ.ஆ), கங்கை புத்தக நிலையம் , சென்னை, ஜுன், 2010.


http://Creativecommons.org//license/by/4.0/.